**நம் குழந்தைகள் அவர்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டும் எனில்,**

அவர்கள் கற்றுக்கொள்ளும் விஷயங்களைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு
கிடைப்பது இன்றியமையாததாகும்.

'உங்கள் குடும்பத்துடன் இணைந்து கற்பது' என்பது பள்ளியில் குழந்தைகளின் கற்றல் பற்றிய, பள்ளி-வீடு கூட்டாண்மையை வளர்க்கும் ஒரு திட்டமாகும். உங்கள் குழந்தை படிக்கும் பள்ளி 2017/18 கல்வியாண்டில் இந்தத் திட்டத்தில் பங்கேற்கிறது.

Lær med Familien

## உங்கள் குடும்பத்துடன் இணைந்து கற்பது

தங்கள் குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் அனைத்து பெற்றோர்களும் மிக முக்கிய பங்காக இருக்கிறார்கள்.



பெற்றோர்கள் எப்படி தங்கள் பிள்ளைகளுக்கு உதவ முடியும் என்பதைப் பற்றிய நல்லதொரு அறிவுரை

பிள்ளைகள் தாங்கள் கற்றுக் கொள்ளும் விஷயங்களைப் பற்றி பேச அனுமதிக்கையில் அவர்கள் கற்றுக்கொள்ளும் விஷயங்களை அறிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும், நினைவில் வைத்திருப்பதற்கும் எளிதாக இருக்கிறது.



அதனால்தான் பள்ளியில் படிக்கும் விஷயங்களைப் பற்றி உங்கள் பிள்ளைகளுடன் பேசுவது முக்கியமானதாக இருக்கிறது.

இப்படி கேட்கக் கூடாது: *"இன்று பள்ளியில் நீ என்ன கற்றுக்கொண்டாய்"?* இந்தக் கேள்விக்கு அரிதாகத்தான் பதில் கிடைக்கும்.

ஆனால் உங்கள் பிள்ளைகளிடம் அவர்கள் பள்ளியில் கற்றுக்கொள்கிறவற்றை விவரிக்கவும் விளக்கவும் உதவுகிற வகையில் பேச்சு கொடுக்க வேண்டும்.



## அதிக எதார்த்தமான எதிர்பார்ப்புகள்

உங்கள் பிள்ளைக்கு நீங்கள் அதிகமான எதார்த்தமான எதிர்பார்ப்புகளை வைத்திருப்பதைக் காண்பிப்பதன் மூலம், அவர்கள் கற்றுக்கொள்வதில் சிறப்பாக செயல்படுகின்றனர் என்பதை உணர்ந்துகொள்வார்கள்

– இன்னும் சிறப்பாக செயல்படுவார்கள்!



## வீட்டிற்கும் பள்ளிக்கும் இடையே இணைப்பு பாலத்தை இணைத்திட வேண்டும்

பள்ளியில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி உங்கள் குழந்தையுடன் பேச, உண்மையில் பள்ளியில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் தான் நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்:



3 *வீட்டுக்கும் பள்ளிக்கும் இடையே இணைப்பு பாலத்தை இணைத்திடும் வழிகள்:*

- **குடும்பத்தின் கற்கும் சூழல்.** உங்கள் பிள்ளையின் ஆசிரியர்கள், பள்ளியில் உங்கள் பிள்ளை என்ன செய்கிறது, என்ன கற்றுக்கொள்கிறது, அவருக்கு எப்படி சிறந்த ஆதரவை தருவது என்பதைப் பற்றி பேசுவார்கள்.
- **குடும்ப பணிகள்.** இவை உங்கள் குழந்தை கற்கும் விஷயங்களைக் குறிக்கும் சிறிய பணிகள், இவை ஒரு மாதத்துக்கு ஓரீரு முறை உங்கள் குழந்தையுடன் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். இது உங்கள் குடும்பத்துக்கு உங்கள் பிள்ளையிடம் பேசுவதற்கு மிகவும் முக்கியமான ஒன்றை கொடுக்கிறது.
- **குடும்ப கண்காட்சிகள்.** ஒரு வருடத்திற்கு ஒருமுறை, மாணவர்கள் அவர்கள் கற்றுக்கொண்டவற்றில் தங்கள் குடும்பங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும் அதை எப்படி கற்றார்கள் என்பதைப் பற்றி தங்கள் குடும்பங்களுக்கு தெரியப்படுத்தும் விதத்திலான கண்காட்சியை திட்டமிடுவர்.

உங்கள் குழந்தையிடம் குறிப்பிட்ட கேள்விகளை நீங்கள் கேட்கலாம்.



அந்தக் **குறிப்பிட்ட கேள்விகளுக்கு**, உங்கள் பிள்ளை தாங்கள் கற்றவற்றை விளக்கவும், அவற்றை வார்த்தைகளாக மாற்றும் சவாலையும் அளிக்கும்.

***தனிப்பட்ட குணாதிசியங்கள் அல்லது கழிவுப்பொருட்களை*** வரிசைப்படுத்துதல் போன்ற பாடங்களில் அவர்கள் கற்றுக்கொண்ட சில சொற்களை உங்கள் பிள்ளைகள் பயன்படுத்துவர்.

**வெளிப்படையான கேள்விகள்** உங்கள் பிள்ளைக்கு நன்கு விளக்கமளிக்கும் சவாலைக் கொடுக்கும். உ-ம்.:

- அவை வித்தியாசமானவை என எப்படி எப்படி கூறமுடியும்?
- இவை நடந்தால் என்ன ஆகும்...?
- அதைப் பற்றி மேலும் சொல்லுங்கள்
- அது வேடிக்கையாக இருக்கிறது, அற்புதமான உள்ளது, ஆபத்தானது - அதைப் பற்றி மேலும் சொல்லுங்கள்...

அல்லது...

- நீங்கள் எப்படி வேலை செய்தீர்கள் என்று மற்ற மாணவர்களுக்கு எப்படி விளக்கினீர்கள்?




## குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் அனுபவங்கள்

குழந்தைகள் தாங்கள் ஏற்கனவே அறிந்திருக்கும் விஷயங்களுடன் தாங்கள் கற்கும் விஷயங்களை இணைக்க முடிந்தால், அதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள அவர்களுக்கு எளிதாகிறது.



அதனால்தான் உங்கள் குழந்தை உடனான உரையாடல்களில் நீங்கள் குடும்பத்துடன் பகிர்ந்துகொண்ட அனுபவங்கள் சிலவற்றை உங்கள் குழந்தையுடன் பகிர்ந்துகொள்வது நல்லது.

உதாரணமாக:

அது வேடிக்கையாக இருக்கிறது. அது எப்போது.......
நாம் எப்போது ஓவியம் வரைந்தோம் என்பது நினைவில் இருக்கிறதா? நாம் போதுமான பெயிண்டை வாங்கவில்லை.



அல்லது:
நான் பள்ளியில் இருந்தபோது அந்த முறையை நாங்கள் பயன்படுத்தவில்லை.
அந்த நாட்களில் நாங்கள்...
அந்தத் தலைப்பை எப்படி கண்டறிந்தீர்கள்? இது எனக்கு பழையதை நினைவூட்டுகிறது...